DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 111/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : பெரியதுரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th June 2025.

**எதிரி ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆயாள்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 10 வருடத்திற்கு முன்பு ஒருநாள் சங்கரன்கோவிலிருந்து பனவடலிசத்திரம் செல்வதற்காக நானும், முருகன் மற்றும் மற்றொரு நபர் அவருடைய பெயர் தெரியவில்லை எதிரி சந்திரனும் ஆட்டோவில் சென்றோம். குருக்கள்பட்டி ஊருக்கு தெற்கு பக்கம் ஒரு பாலத்திற்கு அருகில் லேசான திருப்பம் இருந்தது. திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில் நோக்கி வேகமாக வந்த கார் ஆட்டோவின் மீது இடித்துவிட்டது. எனக்கு வலது முன் கையிலும், இரண்டு பிட்டியிலும் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த வயதான ஒரு நபருக்கு வலது கால் முட்டியிலும், வயிற்று பக்கமும் காயம் ஏற்பட்டது. முருகன் என்பவருக்கு

கையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வர காலதாமதம் ஆனதால் அந்த வழியாக வந்த ஒரு வேன் மூலமாக காயம்பட்ட எங்களை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். என்னுடம் காயம் பட்ட வயதான நபருக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிக்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அந்த வயதானவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசாரன் விசாரணையில் ஆஜர் எதிரிதான் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கரதையாகவும் ஓட்டி வந்து எதிரே வந்த கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சொன்னேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சங்கரன்கோவில் – திருநெல்வேலி சாலை இரண்டு பேருந்துகள் எதிரெதிரே சென்றுக்கொள்ளக்கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். நான் குருக்கள்பட்டி ஊருக்குள் வரும் போது மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றாலும் அதனால் நான் சென்ற ஆட்டோ மிதவேகத்தில் தான் சென்றது என்றாலும் சரிதான். திருநெல்வேலியிலிருந்து வந்த கார்தான் அதிவேகமாக வந்து எங்கள் ஆட்டோ மீது மோதியது என்றால் சரிதான். மேற்கூறிய விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 111/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : சமுத்திரம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th June 2025.

**எதிரி ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் வண்ணாம்பொட்டலில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

28.09.2014 ம் தேதி மாலை 4.00 மணிக்கு குருக்கள்பட்டிக்கு தென்புறம் வைத்து ஆஜர் எதிரியின் ஆட்டோவை அதிவேகமாக ஓட்டி சென்று கார் மீது

மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு சம்பவம் இடத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. காயம்பட்ட முருகன், வேல்சாமித்தேவர், பெரியதுரை ஆகியோர்களை அந்த வழியாக வந்த ஒரு வேனில் ஏற்றி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் கேள்விப்பட்டு காயம்பட்டவர்களை மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ப்பதற்கு உதவி செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**